# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0010/2017/பேரு

ஆணை எண்: 066/2017

நாள்: 13/04/2017

திரு. செ. பாண்டியராஜ்,
த/பெ. திரு. செல்லையா,
எண்.43/1, கீழூர் காலனி,
மம்சாபுரம் – 626 110.

– முறையீட்டு மனுதாரர்

திரு. ஜெயச் சந்திரசேகரன்,
செயல் அலுவலர்,
மம்சாபுர பேரூராட்சி அலுவலகம்,
மம்சாபுரம், விருதுநகர் மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. செ. பாண்டியராஜ் என்பவரின் மனு 20.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 0010/பே/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. செ. பாண்டியராஜ் அவர்களின் முறையீட்டு மனுவில், தான் இம்முறைமன்றத்தில் 12.05.2016 அன்று புகார் அளித்து, அப்புகார் சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்றத்தில் தன்னைப்பற்றி

பொய்யாவணம் புனைந்ததோடு பொய் சாட்சி அளித்ததாகவும் ஆகவே செயல் அலுவலர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 340, 195, 191 (1) (C) மற்றும் 200ன்படி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 167, 193, 197, 500, 501ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே செயல் அலுவலர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க கேட்டுள்ளார்.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் மேற்படி புகார் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நீதித் துறை, நடுவர் நீதிமன்றம் - IIல் குற்றவியல் வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. எனவே, நிலுவையில் இருக்கும் இப்பொருட்பாடு 'நீதிமன்ற வழக்கு crl.m.p. No.663/17ல்' நிலுவையில் உள்ளதால் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் பிரிவு 10 (3) (b)ன்படி இந்நிகழ்வின் பொருட்பாடுகள் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு உகந்தது இல்லை என்று கருதப்படுகிறது. அவ்வாறே இறுதியாணை வெளியிடப்படுகின்றது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இந்த ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. செ. பாண்டியராஜ்,
   த/பெ. திரு. செல்லையா,
   எண்.43/1, கீழுர் காலனி,
   மம்சாபுரம் – 626 110.

2. திரு. ஜெயச் சந்திரசேகரன்,
   செயல் அலுவலர்,
   மம்சாபுர பேரூராட்சி அலுவலகம்,
   மம்சாபுரம், விருதுநகர் மாவட்டம்.

உதிரி - 5